செய்திவெளியீடு எண்.13/2017 நாள் 03.03.2017

## குடிநீர் லாரிகளிலிருந்து கசிந்து சாலைகளில் வீணாகும் குடிநீரை வீணாக்காமல் தடுக்க குடிநீர் வாரியம் நடவடிக்கை

-----

சென்னைக்குடிநீர் வாரிய நீர் நிரப்பு நிலையங்களிலிருந்து சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு செல்லும் குடிநீர் லாரிகளிலிருந்து குடிநீர் கசிந்து சாலைகளில் வீணாவதைக் கண்டறிந்த சென்னைக்குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. வி. அருண்ராய், இ.ஆ.ப. அவர்கள் உடனடியாக அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

லாரிகளில் மேல் மூடி இல்லாமல் இருந்தாலோ, மேல்மூடி இருந்து அதனை சரியாக மூடாததன் காரணமாகவோ லாரிகளில் உள்ள நீர் வெளியேறும் வால்வுகளை சரியாக மூடாததன் காரணமாகவோ, அல்லது வேறு ஏதாவது பழுது காரணமாகவோ குடிநீர் கசிவு ஏற்பட்டால் அது குறித்து அந்தந்த லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களிடம் பேசி அதனை சரி செய்த பின்னர் அந்த லாரியை குடிநீர் விநியோகத்திற்கு அனுப்பவும் அந்தந்த பகுதி பொறியாளர்களுக்கு மேலாண்மை இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தி இருந்தார்கள்.

குடிநீர் முக்கியத்துவத்தின் இன்றைய சூழலில் எக்காரணம் கொண்டும் குடிநீர் சாலைகளில் வீணாகக் கூடாது எனவும் இனி வருங்காலங்களில் அவ்வாறு லாரிகளில் விநியோகம் செய்வதற்காகச் செல்லும்போது சாலைகளில் கசிவு ஏற்பட்டால் நடவடிக்கை எடுப்பதோடு அவர்களுக்கு அபராதம் விதிக்கவும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பகுதிப் பொறியாளர்களுக்கு அறிவுறுத்தி இருந்தார்கள்.

சென்னையில் உள்ள 15 பகுதி அலுவலகங்களிலுள்ள பகுதிப் பொறியாளர்களும் தங்கள் பகுதியில் இயங்கும் நீர் நிரப்பு மையங்களின் கீழ் உள்ள லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களை அழைத்து அவர்களுடன் இது குறித்து விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தி கசிவுகளை உடனடியாக நிறத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

சென்னைக்குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் இந்த நடவடிக்கையால் தற்போது சாலைகளில் குடிநீர் கசிந்து வீணாவது தடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்